# பண்பாட்டு எதிர்ப்பாக அரங்கப் பனுவல்கள் - பின்காலனித்துவ இலங்கையின் தமிழ் நாடகங்களை மீளவாசித்தல்

நவதர்சினி கருணாகரன்

**ஆய்வுச்சுருக்கம்**

நாடகங்கள் இயல்பாகவே அவை எழுதப்பட்ட சமகாலத்தினை பிரதிபலிப்பதாக அமையும். இவ் இயல்பினை பல்வேறு பண்பாடுகளின் நாடகங்களும் அவை காலந்தோறும் ஆற்றுகை செய்யப்பட்ட வரலாறு மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும். இது தமிழ் நாடகங்களிற்கும் பொருந்தி அமையும். ஈழத்துத் தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் காலனித்துவ காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின்னான காலப்பகுதியிலும் நாடகங்கள் மேலாதிற்கு எவ்வாறு எதிர்வினையாற்றியது என்பது தொடர்பாகவே இந்த ஆய்வு கவனத்திற்கொள்கிறது. இத்தகைய நாடக வெளிப்பாடுகளை பண்பாட்டு எதிர்பாக விளங்கிக் கொள்ளலாம். இது குறித்த ஒரு பிரச்சனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்ப்படுத்தி அதற்கான நீதி தொடர்பான கதையாடல்களை உருவாக்க வல்லது. இந்த ஆய்வு இலங்கையில் எழுதப்பட்ட சங்கிலி பற்றிய நாடகங்களுள் எஸ்.தம்பிமுத்துப்பிள்ளையால் எழுதப்பட்ட சங்கிலி அரசன் நாடகம் (1903) மற்றும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சங்கிலி (1956) என்பனவும் பூதத்தம்பியின் வரலாறு தொடர்பான நாடகங்களில் நல்லையாபிள்ளை எழுதிய பூதத்தம்பி விலாசம் (1888) மற்றும் த.சண்மகசுந்தரம் எழுதிய பூதத்தம்பி (1964 )ஆகிய நாடகங்கள் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றோடு தொடர்பு டையதாக பொருத்தமான இடங்களில் தமிழில் எழுதப்பட்ட ஏனைய வரலாற்று நாடகங்கள் ஒப்பிடப்படுகிறது. இந்த வரலாற்று நாடகங்கள் எவ்வாறு குறித்த வரலாற்றினூடாக ஒரு சமூகத்தின் கூட்டு மனநிலையை

பல்வேறு காலப்பகுதியில் வெளிப்படுத்தியது? என்பதில் இவ் ஆய்வு கவனம் செலுத்துகிறது. இலங்கையில் பின்காலனித்துவமும் தமிழ் நாடகங்களும், தமிழ் வரலாற்று நாடகங்களும் வரலாற்று உருவாக்கமும், சங்கிலி மற்றும் பூதத்தம்பி நாடகம்: காலனித்தவகாலம், சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கை என்ற விடயங்களுடாக நாடகம் எவ்வாறு ஒரு பண்பாட்டு எதிர்ப்பு வடிவமாக இருந்தது என்பதனை விளங்கிக் கொள் கிறது. இந்த வரலாற்று நாடகங்கள் ஒரு பண்பாட்டு எதிர்ப்பாக அரசியல் கதையாடல்களிற்கு வடிவம் கொடுத்தன. நடைமுறை அரசிய லிலும் ஏனைய சமூக முரண்பாடுகளை அணுகுவதிலும் தீர்வுகளை நோக்கிச் செல்வதிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இவ்வாறாக எழுதப்படும் நாடகங்கள் அவ்வக்காலத்தின் சூழமைவில் வைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய அதே வேளையில், இந்த வரலாற்று நாடகங்களின் சமகாலத் தேவை என்ன என்பதனை விளங்கிக் கொள்வதும் முக்கியமானது. இலங்கையில் இனமுரண்பாடும் அதன் மேலாதிக்கம் தொடர்பாக வெளிப்படையாகப் பேச முடியாத நிலையில், அவை காலனித்துவத்தின் மேலாண்மையைப் பேசுவதனூடாக இந்த வரலாற்று நாடகங்கள் சொல்லவரும் செய்தி என்ன? என்பதும் நாடகங்களினூடாக பதிவு செய்யப்பட்ட அரசியல் வரலாறும் சமூக வரலாறும் எவ்வளவிற்கு சமூக நிலமைகளின் மீது எதிர்வினையாற்றி யுள்ளது என்பதனைக் கண்டுகொள்ள முடியும்.

**திறவுச் சொற்கள்:** பண்பாட்டு எதிர்ப்பு, வரலாற்று நாடகம், காலனித்துவம், வரலாற்றுருவாக்கம்

## அறிமுகம்

"உலகின் விதியைத் தீர்மானிப்பது தோல்வியடைந்த போர்களோ அல்லது வெற்றிபெற்ற போர்களோ அல்ல அவைகளைப் பற்றிய கதைகளிலுள்ள ஈடுபாடும் நம்பிக்கையும்தான்" - ஹரோல்ட் கோட்டார்ட்

கதைகள் அனைத்துப் பண்பாடுகளிலும் அபிப்பிராயங்களை உருவாக்குவதற்கும் நம்பிக்கைகளைக் கட்டி எழுப்புவதற்கும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. பண்பாடு என்பது சமுதாயத்தின் அல்லது ஒரு சமூகக் குழுவின் தனித்துவமான ஆன்மீகம், பொருள், அறிவுசார் மற்றும் உணர்ச்சி அம்சங்களின் தொகுப்பாக வரையறுக்கிறது. இது கலை மற்றும் இலக்கியம் மட்டுமல்ல, வாழ்க்கை முறைகள், ஒன்றாக

வாழும் வழிகள், மதிப்பு அமைப்புகள், மரபுகள் மற்றும் நம்பிக்கைகளை உள்ளடக்கியது (யுனெஸ்கோ, 2020). பண்பாடு சார்ந்த வாழ்க்கை முறைமை கலைவெளிப்பாடுகள் என்பன ஏதோஒரு செய்தி ஒன்றினை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும் என்பதை உன்னிப்பான அவதானிப்பின் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

பண்பாட்டு எதிர்ப்பு என்பது எல்லோராலும் அணுகக்கூடிய ஒரு கலை வெளிப்பாட்டுமுறை. அது ஒரு நிலைமை மீதான பரந்தளவிலான குரலாக் குறித்த அரசியல், பொருளாதார, சமூக அல்லது சமூகத்தில் குறித்த ஒரு சூழ்நிலை என்பனவற்றை எதிர்ப்பதிலும் விமர்சிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. கலாசார எதிர்ப்பு என்பது குறித்த ஒரு பிரச்சனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்ப்படுத்துவதிலும் அதற்கான நீதி வேண்டியும் கவனம் செலுத்துகிறதேயன்றி பரிதாபமோ அல்லது அனுதாபம் தேடுவதற்கான ஒன்றல்ல (cultural-resistance, 2020).

ஈழத்துத் தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் காலனித்துவ காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின்னான காலப்பகுதியிலும் நாடகங்கள் மேலாதிற்கு எவ்வாறு எதிர்வினையாற்றியது என்பது தொடர்பாகவே இந்த ஆய்வு கவனத்திற்கொள்கிறது.

இவ் ஆய்வு யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலி மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தின் முதலியாராக இருந்த பூதத்தம்பி ஆகியரோரது வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாடகங்களை கருத்திற் கொள்கிறது. காலனித்துவ காலத்திலும் சுதந்தித்திற்குப் பின்னரும் இவ் வரலாறுகள் பல்வேறு வரலாற்றுப் புனைவுகளுடன் நாடங்களாக எழுதப்பட்டன. இவற்றுள் பதிப்பிக்கப்பட்ட நாடகங்களை விடவும் பல நாடகங்கள் கையெழுத்தப் பிரதிகளாகவே காணப்படுகின்றன. அவற்றுள் சங்கிலி பற்றிய நாடகங்களுள் எஸ்.தம்பிமுத்துப்பிள்ளையால் எழுதப்பட்ட சங்கிலி அரசன் நாடகம் (1903) மற்றும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் சங்கிலி (1956) என்பனவும் பூதத்தம்பியின் வரலாறு தொடர்பான நாடகங்களில் நல்லையாபிள்ளை எழுதிய பூதத்தம்பி விலாசம் (1888) மற்றும் த.சண்முகசுந்தரம் எழுதிய பூதத்தம்பி (1964) ஆகிய நாடகங்கள் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறன. இவற்றோடு தொடர்பு டையதாக பொருத்தமான இடங்களில் தமிழில் எழதப்பட்ட ஏனைய வரலாற்று நாடகங்கள் ஒப்பிடப்படுகிறது. ஆனால் சங்கிலி அரசன்

வரலாற்று நாடகங்கள் ஏறத்தாள பதினொரு நாடகங்களும், பூதத்தம்பி தொடர்பாக பதினைந்து நாடகங்களும் எழுதி வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை யாவுமே வரலாறினைப் பதிவு செய்தல் என்பதனைவிடவும் அது ஒரு சமூகத்தின் கூட்டு மனநிலையினையே வெளிப்படுத்தியது.

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னான தமிழ் நாடகங்கள், மரபுரீதியான அரங்கப் பாரம்பரியங்களதும், மேலைத்தேய அரங்கின் செல்வாக்கினதும் கலப்பிணைவின் மூலம் புதிய ஒரு அரங்க மொழி உருவாகிறது. இது காலனித்துவம் மற்றும் சுதேசிய அரங்குசார் சிந்தனையின் உற்பத்தியாகும். இவ்வாறே வரலாற்று நாடகங்களும் தமிழில் காணப்பட்ட அனைத்து நாடகவடிவங்களிலும் எழுதப்பட்டன. அவை representational method இலேயே அளிக்கை செய்யப்பட்டனவேயன்றி குறித்த ஒரு வரலாற்றுக் காலத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்படவில்லை அத்துடன் அவை வரலாற்றுக் காலஒழுங்கினைக் கருத்திற்கொண்டு எழுதுதல் என்பதை விடவும் அவை ஒரு வரலாறு தொடர்பான கூட்டுமனநிலையை வெளிப் படுத்துவதாகவே இருந்தது.

சங்கிலி அரசன் போத்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் போது யாழ்ப்பாணத்தின் அரசனாக இருந்தவர். இவர் போர்த்துக்கேய ருடன் போரிட்டது தொடர்பாக நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. பூதத் தம்பி யாழ்ப்பாணத்தின் முதலியாக இருந்தவர். அவர் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்தில் ஒல்லாந்தரின் பிரதிநிதியான அந்திராசியால் குற்றஞ்சாட்டப்பட்டு, ஒல்லாந்தருக்கு துரோமிழைத்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டு பூதத்தம்பி தூக்கிலிடப்பட்டு மரணதண்டனை வழங்கப்படுகிறது.

இவ்விரு நாடகங்களினதும் சாராம்சம் மேற்கூறப்பட்டவாறாக இருப்பினும் காலனித்தவ காலப்பகுதியில் எழுதப்பட்ட நாடகங்களில் சங்கிலி அரசன் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரானவராக சித்தரிக்கப்படுகிறார். பூதத்தம்பி தொடர்பாக எழுதப்பட்ட நாடகங்கள் சாதிரீதியான பிரிவி னைகளைத் தூண்டுவதைப் பிரதானமாகக் கொண்டு எழுதப் பட்டன. இந்த நோக்கங்களை எட்டும் வகையில் வரலாற்றுச் சம்பவங்கள் நாடகத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டன. காலனித்துவகாலத்தில் எழுதப் பட்ட யாழ்ப்பாண வரலாறுகளும் இத்தகைய நோக்கங்களிற்காகவே எழுதப்பட்டன. வரலாறுகள் தமிழ்ச் சமூகத்தினைப் பிளவுபடுத்தும் நோக்கத்திற்காக எழுதப்பட்டது.

**இலங்கையில் பின்காலனித்துவமும் தமிழ் நாடகங்களும்**

காலனித்துவம் பாரம்பரிய அறிவுமுறையில் எத்தகைய தாக்கம் செலுத்தியது என்பது பல்வேறு துறைகளிலும் உணரப்பட்டது. "வேற்று நாட்டுக் கல்வியும் நாகரிகமும் நாளுக்கு நாள் எம்மிடையே நாளுக்கு நாள் பதிந்து காழ்ப்புறவே செவியாறலாக நம்மிடையே வந்த அப்பாடல்கள் அருகத் தொடங்கின. வாழையடி வாழையாக வந்த கற்பனைக் கதைகளும் கேட்பாரின்றி மறைந்தன (சோமசுந்தரப்புலவரின் எணைை 1955) எனக் கூறப்படுவது பொதுவாக சமூகம், பண்பாடு என்பனவற்றிற்குப் பொருத்திப் பார்க்கப்பட முடியும்.

இலங்கையில் காலனித்துவ காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின்னரும் சமூகம், கலாசாரம் சார்ந்த விடயங்களை பாரம்பரியக் கதைகள், வரலாறுகள், தத்துவங்கள் என்பனவற்றையும் சமகாலத்து நிலமை களையும் நாடகங்களாக ஆக்குவதன் மூலம் இலங்கைத் தமிழ்ச் சமூகம் வழிப்படுத்தப்பட்டு வந்ததுள்ளது. சொக்கலிங்கம் அவர்களின் குறிப்பு இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. அறப்போதனைக்கால நாடகங்கள் மேலை நாட்டுக் கலாசாரத்தால் சிதைவுறும் நமது கலாசாரம் பற்றிய அறிவூட்டலுக்கு நாடகம் பயன்படுத்தப்பட்டது (சொக்கலிங்கம்.க: 1977, 62- 64). இந்தவகையில் காலனித்துவத்தின் செல்வாக்கு பற்றிய எதிர்வினைகள் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே கலைப்படைப்புகளாக வெளிவரத் தொடங்கின.

காலனித்துவத்தின் தாக்கமும் அதன் செல்வாக்கும் தொடர்பாக பல்வேறு தளங்களிலும் சிந்திக்கப்பட்டது. எனினும் ஈழத்துத் தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் 1948ஆம் ஆண்டின் சுதந்திரத்திற்குப் பின்காலனித்துவ எதிர்ப்பு என்பதனுடன் இனமுரண்பாடு என்ற அம்சமும் இணைந்து கொள்கிறது. இதனால் இனமுரண்பாடுகள் காலனித்துவம் போன்ற ஒரு மேலாதிக்கமாக இனமுரண்பாடுகளைக் கருதியமை காரணமாகவே தமிழ் வரலாற்று நாடகங்கள் முக்கியத்துவ முடையன ஆகின்றன. இது தேசியவாதம், இன அடையாளம், பண்பாட்டுப்பேணுகை என வியாக்கியானிக்கப்பட்டாலும் வரலாற்று நாடகங்களில் அவைஅனைத்தும் ஒரு பண்பாட்டு எதிர்ப்பாக வலியுறுத்தப்பட்டது எனலாம்.

**தமிழ் வரலாற்று நாடகங்களும் வரலாற்று உருவாக்கமும்**

1960ற்கும் 1970ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே தமிழில் அதிகளவு வரலாற்று நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன (சொக்கலிங்கம்: 1977இ15) இந்த வரலாற்று நாடகங்கள் எழுதப்படுவதனூடாக வரலாற்றுருவாக்கம் இடம்பெற்றது. அதாவது சுதந்திரத்திற்குப் பிறகு எழுதப்பட்ட இந்த வரலாற்று நாடகங்களின் பேசுபொருள் அல்லது சாராம்சம் ஒன்றினை இழந்த துயரம் என்பதாகும். இதனால் வரலாற்று நாடகங்கள் பெரும்பாலானவை எல்லாமே அவல உணர்வையே பிரதானமாக வெளிப்படுத்துகின்றன.

சங்கிலி மற்றும் பூதத்தம்பி தொடர்பான வாய்மொழி வரலாறுகள், எழுதப்பட்ட வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு நாடகங்கள் காலந்தோறும் பல்வேறு வடிவங்களில் எழுதப்பட்டன.

காலனித்துவத்திற்கு எதிரான குரலாக இந் நாடகங்கள் படைக்கப் பட்டாலும் அவை சுதந்திரத்திற்குப் பின்னான இன முரண்பாடுகளையும் கருத்தில் எடுப்பனவாகவும் அதற்கான ஒரு எதிர்வினையாக இந் நாடகங்கள் தொழிற்பட்டன. இத்தகைய கலாசார எதிர்ப்பின் அம்சமாக இந்த வரலாற்று நாடகங்களில் உள்ளூர் காலனித்துவ வரலாற்றுடன் தொடர்புபட்ட கதைகள், பாத்திரங்கள், என்பனவற்றைப் பிரதானமாகக் கொண்டு நாடகங்களினூடாக வரலாற்றுருவாக்கம் நடைபெற்றது. வரலாற்றில் காணப்படும் வீரர்கள்: சங்கிலி, பூதத்தம்பி, வீரபாண்டிய கட்டபொம்மன், ராஜராஜசோழன், எல்லாளன், கண்டிஅரசன், ஆறுமுகநாவலர் என நீண்டு செல்லும் வரலாறுகள் மீள்படைப்புச் செய்யப்படுகின்றன. காலனித்துவம் தூற்றிய உள்ளூர்த் தலைவர்கள் நாடகங்களில் வீரர்களாக உருவாக்கப்படுகின்றனர்.

வரலாறுகள் நாடகங்களின் ஊடாகவே மக்களுக்குக் கற்பிக்கப் பட்டது. தமிழரின் ஒருமைப்பாடு, இன உணர்வு மட்டுமின்றி இனங் களிற்கு இடையிலான ஒருமைப்பாடுகளை வலியுறுத்தியும் வரலாற்று நாடகங்கள் எழுதப்பட்டன. கண்டியரசன் (எஸ்.செல்லத்துரை)— காலனித்துவ காலத்திலும் அதற்குமுற்பட்ட காலத்திலும் எவ்வாறு பிராந்திய அரசர்களின் ஆட்சிமுறையும் இன ஒற்றுமையுடன் காலனித் துவத்திற்கு எதிராக நடாத்திய ஆயுதப் போராட்டங்கள் விவரிக்கப்படு கின்றன. அவை மீளமீள எழதப்படும்போது சமகால வரலாறுகளும் சமூகவிடயங்களும் நாடகத்தினூடாகப் பிரதிபலிக்கப்பட்டன.

இத்தகைய வரலாற்று நாடகங்கள் சமகால யதார்த்த சிந்தனைகளை நோக்கி பார்வையாளரை பயிர்ச்சியளித்தது, ஈர்த்தது. நாடகங்களை எழுதிய முறையும் முக்கியத்தவம் பெறுகிறது. பனுவல்நிலை ஊடாட்டம் (intertextuality) discursive முறையும் பயன்படுத்தப்பட்டது (Helen Gilbert and Joanne Tompkins ,2006:16). அதாவது ஒரு நாடகத்தை எழுதுவதற்கு முன்னரேயே எழுதப்பட்ட நாடகம் ஒன்றினை உசாத்துணையாகயாகக் கொள்ளுதல் எனும் முறமை காலனித்துவம் மற்றும் சுதந்திரத்திற்குப் பின்னான காலங்களிலும் தொடர்ந்தது. பெரும்பாலான இத்தகைய வரலாற்று நாடகங்களில் பயன்படுத்தப்பட்ட வரலாற்றுச் சம்பவங்கள், கதைகள் என்பன ஓர் உணர்ச்சி சார்ந்த மனப்பதிவுகள் ஆகவே வெளிப் படுத்தப்பட்டன. இவை வரலற்றினை உணர்ச்சி சார்ந்து அணுகப்படவை யாகக் காணப்பட்டன. ஆனால் புறநடையாக பேராசிரியர். க.கணபதிப்பிள்ளை, த.சண்முகசுந்தரம் முதலியோர் வரலாற்று நாடகங் களை வரலாற்று ஆதாரங்களோடு எழுதினர். காலனித்துவ காலத்தில் எழுதப்பட்ட நாடகங்களில் எழுதப்பட்ட நாடகங்களில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள், வரலாற்று பாத்திரங்களைப் பயன்படுத்தி சமகால நிலைமைகளை வெளிப்படுத்தும் வகையில் இந் நாடகங்கள் எழுதப்பட்டன. இவர்களுக்குப் பின் இத்தகைய வரலாறுகளை நாடக மாக எழுதியவர்கள் இந் நாடகங்களையே தமக்கான உசாத்துணையாகக் கொண்டனர்.

இதற்கு டிஸ்கேசிவ் (discursive) அணுகுமுறை என்பது ஏற்கனவே பரீட்சயமான நாடக வடிவங்கள் மற்றும் ஏற்கனவே தெரிந்த கதைகள் சம்பவங்களை வெவ்வேறு வியாக்கியானங்களுடன் பயன்படுத்தி நாடகங்கள் எழுதுவதாகும். இம்முறை ஒரு மாற்றுச் சிந்தனை உருவாக்கல் என்ற நிலையிலேயே பயன்படுத்தப்பட்டது. இவ்வாறாக எழுதும் முறைமை முன்னைய நாடகங்களின் அதிகாரக் கட்டமைப்பின் ஸ்திரமின்மையை வெளிக்காட்டுதல் என்பதைவிடவும் அந்தச் சிந்தனையின் செல்வாக்கிற்குட்பட்டிருப்பதை வெளிக்காட்டும் (Helen Gilbert and Joanne Tompkins,2006:16).

நாடகங்களின் கதைச்சூழ்வு (plot line) பிரதான பாத்திரங்ளுக்கு அழுத்தம் கொடுத்து பார்வையாளர்களை ஒரு கூட்டுச் சமூக உணர் வினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. காலனித்துவகாலம் மற்றும் சுதந்திரத்திற்குப் பின்னான காலங்களில் எழுதப்பட்ட சங்கிலி

அரசன் மற்றும் பூதத்தம்பி நாடகம் எத்தகைய விடயங்களில் கவனம் செலுத்தியது என்பதனை சுருக்கமாகமான அவதானிப்பு கீழே தரப்படுகிறது.

**சங்கிலி மற்றும் பூதத்தம்பி நாடகம்: காலனித்தவகாலம், சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கை**

சங்கிலி அரசன் நாடகம் (1903) ஏதேச்சரிகாரம்மிக்க கொடுங்கோல் அரசன், கத்தோலிக்கருக்கு எதிரான இந்து அரசன், மன்னாரில் படுகொலை செய்தவர், சங்கிலி தனது சகோதரனைக் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றியவர், கத்தோலிக்க மதத்திற்கு மதம் மாறிய தனது மகனிற்குத் மரணதண்டனை வழங்கியவர் என சுதேசிகளின் தலைவர்கள் இவ்வாறான கீழ்த்தரமான பண்புடையவர்களாக படைக்கப் பட்டனர்.

சங்கிலி (1956) சங்கிலி ஒரு வீரன், தமிழ் மன்னன், போர்த்துகேயர் களுக்கு எதிராக போராடியவர், தமிழர்களும் முஸ்லீம்களும் இணைந்து போர்த்துக்கேயர்களுக்காக போராடுகிறார்கள். மன்னாரில் நடைபெறும் சம்பவம் போர்த்துக்கேயர்களுக்கு எதிரான போராக காட்டப்படுகிறது. சங்கிலி தனது பதவியையும் பொறுப்புகளையும் தன்வாரிசுகளிற்குக் கொடுத்தவிட்டு ஓய்வு பெற்றுக்கொள்வதாகவும், தமிழர்களை போற்றுவதாகவும் நாடகம் நிறைவுபெறுகிறது.

காலனித்துவ காலத்தில் எழுதப்பட்ட பூதத்தம்பி (1888) நாடகத்தில் பூதத்தம்பி முதலியார் பதவியை ஒல்லாந்தர்களிடமிருந்து பெற்றார், உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர், அந்திராசி முதலியார் கிறிஸ்தவர் அத்துடன் பூதத்தம்பியைவிட சாதியில் குறைந்தவர் என்றும் இத்தகைய காரணங்களாலேயே இவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படுவதாக சித்தரிக்கப்படுகிறார். அத்துடன் இறுதியாக பூதத்தம்பியின் உடற் பாகங்கள் துண்டங்களாக்கப்பட்டு எறிந்து விடப்பட்டதாகவும் பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி தனது கணவனைத்தேடி வரும் போது இவற்றைக் கண்டு நீண்ட ஒப்பாரி பாடுவதாக காட்சிப்படுத்தப்படு கிறது. யாருமற்ற பற்றைக் காடுகள் நிரம்பிய இடம் அங்கே இருளில் தனியாக நின்று கொண்டு ஒப்பாரி பாடுவதாகவும் வருகிறது.

சுதந்திரத்தித்திற்குப் பின்னர் எழுதப்பட்ட பூதத்தம்பி(1964) நாடகத்தில் மக்களின் செல்வாக்கு அதிகம் பெற்றதனாலேயே அவருக்கு

முதலியார் பதவி வழங்கப்படுகிறது, அந்திராசி முதலியார் பூதத்தம்பி முதலியாரின் மனைவியிடம் ஆசை கொண்டார் என்றும் அதனால் அந்திராசி பூதத்தம்பியைப் பழிவாங்குவதாகவும் படைக்கப்பட்டுள்ளது. பூதத்தம்பியைக் கைது செய்து சிறைப்பிடிக்கப்பட்டு வைத்திருந்தபோது பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி தனது மகனுடன் சென்று ஒல்லாந்தரிடம் நீதி கேட்கும் பெண்ணாகவும் இறுதியில் நீதி மறுக்கப்பட்டு பூதத்தம்பிக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் இங்கு தண்டனை முன்னையதைப் போன்று காட்சிப்படுத்தப்படவில்லை. ஒல்லாந்தர்களுக்கு எதிரான ஒரு தனிமனிதனின் மரணம் என்பதை விடவும், இது குறிப்பாக வரலாற்று நாடகங்களில் காணப்படும் பொதுத் தன்மையான தனிமனிதன் ஒருவனின் விதி என்பது ஒரு குழுவினரை அல்லது மக்களைக் குறித்து நிற்கிறது எனலாம் (Pavis, Patrice, 1998: 147).

காலனித்துவத்திற்கு பின்னான காலப்பகுதியில் தமிழ்த் தேசியம் என்ற கருத்துநிலையின் செல்வாக்கும் 1950களில் இலங்கையில் வலுவடைந்த இனமுரண்பாடும் காரணமாக இத்தகைய வரலாறுகள் கதைகள் தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தும் வகையில் தமிழர்களை பிளவுபடுத்தும் சம்பவங்கள் நீக்கப்பட்டு அவையாவும் தமிழர்கள் என்ற ஒரு பொது அடையாளத்தினை பிரதிநிதித்துவம் செய்வதாக நாடகங்களாக உருவாக்கப்பட்டது

இவ்வாறான நாடகங்கள் உருவாகுவதற்கு இலங்கைத் தமிழர்களுடைய வரலாற்றுகள் சுதேசிகளின் நோக்கு நிலையினின்று எழுதப் படுவதும், வரலாற்று ஆதாரங்களுடன் வரலாறுகளை எழுதியதால் ஏறப்பட்ட சிந்தனை மாற்றம் காலனித்துவ காலத்தில் பயன்படுத்தப்பட்ட இக்கதைகளை சமகாலத் தேவைக்குப் பயன்படுத்துவதற்கு தூண்டுதலாக அமைந்தது எனலாம். இந்தவகையில் நாடகம் தேசியவாதத்தின் மையமாக காலனித்துவ மற்றும் இன மேலாதிக்கத்திறகு எதிரான எதிர்ப்பு வெளிப்பாடு என்ற வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

பேராசியர்.க.கணபதிப்பிள்ளை சங்கிலி மன்னனின் வரலாற்றினை ஆதார பூர்வமாக எழுதியுள்ளதோடு அதனை அடிப்படையாகக்கொண்டு சங்கிலி மன்னன் ஒரு தமிழ் அரசன், அரசனின் ஆட்சி மொழி மற்றும் ஆட்சிக்குட்பட்டிருந்த யாழ்ப்பாணராட்சியத்தின் புவியியற் பரப்பு என்றவாறான தகவல்கள் பொதிந்த நாடகமான எழுதி அதனை 1956ஆம் ஆண்டு வெளியிட்டதோடு அதனை மேடையேற்றியுமுள்ளார். 1956ஆம் ஆண்டு இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்டு

இனமுரண்பாடுகள் வலுப்பெற்ற காலப்பகுதியாகும். இந்த நாடகத்தினை இனமுரண்பாடுகளின் எதிர்வினைஎனக் கொள்ளலாம். இவருக்குப் பின்வந்தவர்கள் இநத சங்கிலி நாடகத்தினை முன்மாதியாகக்கொண்டு தேசியசிந்தனை பிரதிபலிக்கும் சங்கிலி அரசன் பற்றிய பல்வேறு நாடகவடிவங்களிலும் எழுதினர். குறிப்பாக கத்தோலிக்கமதம் சார்ந்தோரும் சங்கிலி மன்னனை மதங்களின் பிரிவினை கடந்து தமிழ்மன்னனாக சித்தரிக்கத்தொடங்கினர்.

இவ்வாறு இந் நாடகங்கள் எதிர்ப்பு வடிவங்களின் கருத்து நிலை, விழுமியங்கள் என்பனயாவும் ஒரு மேலாதிக்கத்திற்கு எதிரானவை யாகவே இருந்துள்ளன. சங்கிலி மற்றும் பூதத்தம்பி தொடர்பான நாடகங்கள் காலனித்தவத்தின் வன்முறையை சுதேசிகள் வெளிப்படுத்திய சர்வதேச காலனித்துவவாதிகளுக்கு எதிரான எதிர்ப்புக்குரலாகவும் கொள்ளமுடியும். குறிப்பாக பேராசிரியர் கணபதிப்பிள்ளையைப் பின்பற்றி த.சண்முகசுந்தரம் அவர்களும் பூத்தம்பி மற்றும் சங்கிலி வரலாறுகளை நாடகமாக வரலாற்று ஆதாரங்களுடன் எழுதியுள்ளார்.

இவற்றினூடாக சுதேசிகளின் பிரதிநிதிகள் தமது சொந்த சமூகத் திற்கே துரோகமிழைத்தவர்கள், சொந்தமக்களாலேயே வெறுக்கப்பட்ட வர்கள் சுதந்திரத்திற்குப்பின் தமிழர்கள் என்ற ஒரு பொது உணர்வின்கீழ் திரளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்ப்படுகிறது. எதிர்ப்பின் பல்வேறு வடிவங்கள் ஒன்று திரள்கின்றன எனலாம்.

கதைகளை மாற்றுதல் என்பது சமூக பொருளாதார கலாசார நிலைமாற்றத்தின் வெளிப்பாடாகும் என்ற வகையிலும் அவை விழுமி யங்கள், தனிநபர்கள், மற்றும் தேசம் தொடர்பான ஒரு களஞ்சியமாக, பின்காலனித்துவ காலத்து சிந்தனை ஏற்ப்படுத்திய மாற்றங்கள் இவ்வாறான வரலாறுகளாக வெளிபட்டன (Janelle Treibitz and others:02) இவ்வாறாக நாடகங்களினூடாக எழுதப்படும், சமூகம் நம்பும், உருவாக்கும் கதைகள் அச்சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றன. ஒரு சமூகம் எதனை நிறைவேற்ற வேண்டும், அதன் சிந்தனைகள் விழுமியங்கள், உலக நோக்குநிலைகள், சமூகம் யதார்த்தங்களைப் வியாக்கியானிக்கும் முறை என பலதளங்களில் செயற்படுகிறது. ஒரு வகையில் சமூகம் உருவாக்கிக் கொள்ளும் இத்தகைய கதைகளினாலேயே ஒரு சமூகம் தன்னைத்தானே ஆட்சி செய்கிறது. இது சமூகத்தில் ஏற்கனவே பயில்வில் இருக்கும் அரங்கவடிவம், ஏற்கனவே சமூகம்

தனக்கென வைத்திருக்கும் கதைகளை வியாக்கியானிக்கப்படுத்துதல், அவற்றை விரிவுபடுத்துதல் அல்லது அக்கதைகளிலுள்ள சில அம்சங்களிற்கு மாத்திரம் அழுத்தம் கொடுத்து நாடகங்கள் எழுதுவதால் இத்தகைய நாடகங்கள் சமூகத்திற்கு மிகவும் நெருக்கமான ஒன்றாக உணரப்பட்டதெனலாம் (Drew Eisenhaur and Brends Morphy: 20 R , 02)

வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டங்களிலும் அதிகாரத்தில் இருப்பவர்களிற்கு சார்பானது எதுவோ அந்த மேலாதிக்கத்தின் பிரதிபலிப்புகளே உலகப் பார்வையை தோற்றுவித்துக் கொண்டு வந்தது. இது போன்றே காலனித்துவ காலத்தில் காலனித்துவ நோக்கில் தமிழில் எழுதப்பட்ட வரலாற்று நாடகங்களின் நோக்குநிலையே அதிகாரபூர்வமானதும் அங்கீகரிக்கப்பட்ட வரலாறாகவும் இருந்து வந்தது. இந்தக் கதைகள்: காலனித்துவக்கதைகள் மீள எழுதப்படுதல் மற்றும் காலனித்துவக்கதைகளுக்கு மாற்றாக எழுதப்படுதல் என்பதோடு தேசிய பிரதேச கதைகளாக இவை காணப்படுகின்றன. இதனால் இக்கதைகளினூடாக ஒரு தேசம் (புவியியற்பரப்பு) ஒன்று கட்டி எழுப்பப்படுகிறது. காலனித்துவ அரசியல் அனுபவங்களிலிருந்து இக்கதைகள் எழுதப்படுவதால் தேசியவாத சிந்தனைக்கு இவை வலுவூட்டுவதாகவும் காலனித்துவத்தைக் கேள்வி கேட்பதாகவும் உலகப் பார்வைக்கு சவாலானதாவும் காணப்படும் இப்பண்புகளையே தமிழ் வராலாற்று நாடகங்கள் பிரதிபலித்தன. கதைகள் மாற்றுக் கதையாடல்களாக காணப்படுகிறது. உதாரணமாக அதிகாரத்திலுள்ள பாத்திரங்கள் மீதான கோபம், பயம் என்பன பிரதிபலிக்கும் வகையில் நகைச்சுவை உணர்வுடன் படைக்கப்பட்டன. நகைச்சுவைப் பண்பு என்பதும் ஒருவதமான ஒருவதமான எதிர்ப்பினை வெளிப்படுத்துவதாகும். சங்கிலி நாடகத்தில் பறங்கியர்கள் பற்றிய சுதேசிகளின் உரையாடல் வருமாறு:

> கந்தையா: சுன்னாகச் சந்தையிலே ___ பறங்கி
> சுங்கானைப் போட்டுவிட்டான்
> பார்த்துக் கொடுப்பவாக்குப் பறங்கி
> பாதிச்சுங்கான் கொடுப்பான் (கணபதிப்பிள்ளை: 2003,391)

இவ்வாறு நகைச்சுவை உணர்வுடன் அவை நிகழ்த்தப்படும் போது அவற்றின் மீதான பயம் நீக்கப்படுகிறது. இத்தகைய நாடகங்கள் ஒரு மக்களது குரலாகவும் அவர்களுடைய நோக்கங்களை அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் ஒரு மார்க்கமாகவும் காணப்படுகிறது. பல காலங்களாகவே மௌனங்கள் நகைச்சுவைகளின் ஊடக

வெளிப்படுவதைக் காணலாம். வன்முறையும் வன்முறையும் சந்திக்கும் பொழுது ஒருபோதும் வெற்றி ஏற்படாது. இத்தகைய கலைத்துவ வெளிப்பாடுகள் மக்களிடையே பெரும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் உபாயங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வரலாற்றுச்சம்பவங்கள் மீதான உணர்ச்சிகளும் இந்நாடகங்களில் காட்சிப்படுத்தப்படுகிறது. ஒன்றில் அவற்றைக்கேலி செய்கிறோம் அல்லது அபிப்பிரயங்களைக் கூறுவதற்கான சக்திவாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்துகிறோம். மாற்று உலக நோக்கையும் எமது வாழ்க்கைக்கான சமூகநீதியையும் உருவாக்கும் ஒரு தந்திரோபாயமாக இதனைக்கூறலாம். (உதாரணம் பூதத்தம்பி நாடகம் அந்திராசி கேலிக்குரிய பாத்திரமாக சித்தரிக்கப்படுகிறது. நாடகத்தின் இறுதியில் பூதத்தம்பி தூக்கிலிடப் படுவது சமூகநீதி தொடர்பான கேள்விகளைத் தூண்டுகிறது.)

இத்தகையதான வரலாற்றின் மீதான மீள்பார்வை மூலம் ஒரு சமூகம் மீளவும் ஒருங்கிணையும் சந்தர்ப்பத்தினை வழங்குகிறது. சமூகமாக ஒன்றிணையும் பண்பு கட்டி எழுப்பப்படுகிறது. 1960களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விழாக்களில் வரலாற்று நாடகங்கள் இல்லாத சந்தர்ப்பங்களைக் காண்பதே மிகவும் அரிது என்று கூறப்படு மளவிற்கு இந்நாடகங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன (தமிழாராட்சி மநாடு 1974). யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 25வது விழாவில் சங்கிலியன் வரலாறு நாடகம் மேடையேற்றப்பட்டது.

**முடிவுரை**

ஈழத்தில் தமிழ் வரலாற்று நாடகங்களை கலாசார எதிர்ப்பாகக் கொள்ளமுடியும். இது பின்காலனித்துவகாலத்திலும் மற்றும் தொடர்ந்து இலங்கையில் நடைபெற்ற இனமுரண்பாடுகளின்போதும் நாடகங்கள் ஒரு கலாசார எதிர்ப்பு என்ற வகையில் மக்களிடம் இன உணர்வினைத்தக்கவைத்துக் கொள்ளக் கூடியவகையில் செயற்பட்டமை இங்கு முக்கியமாகக்கவனத்திற் கொள்ளப்படுகிறது.

வரலாற்று நாடகங்கள் என்பவை எழுதப்பட்ட வரலாறுகள், வாய் மொழி வரலாறும் தொடர்பான உரையாடலை உருவாக்குதல், சமூகத் தினைக் கட்டி எழுப்புதல், உண்மைகளை வெளிக்கொண்டுவருதல், சிந்தனை அணுகுமுறைகளில் மாற்றம் ஏற்படுத்தல், பங்கு கொள்ளலைத்தூண்டுதல், சூழலை நிலைமாற்றுதல், கருத்துரீதினான

செல்வாக்கினை பேணுதல் என்ற கலாசார எதிர்ப்பின் நோக்கங்களை நிறைவேற்றியதாகக் கூறலாம். (உதாரணம்: சங்கிலி அரசன், பூதத்தம்பி ஆகிய வரலாற்றுப் பாத்திரங்கள் தாம் வாழ்ந்த சமூகத்திற்காக இறுதிவரை போராடியவர்கள் என்ற வகையில் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளாப் பிரதிநிதித்துவம் பெறுதல், இவர்களின் இறப்பு ஒரு இனத்திற்கு எதிரான வன்முறையாக பிரதிநிதித்துவப்படுத்துதல், இதன்மூலம் மேலாதிக் கத்திற்கெதிரான சிந்தனைகள் ஊட்டம் பெறுகின்றது என்வாறான நிலைமைகளை அவதானிக்கலாம். இத்தகைய கலாசார எதிர்ப்பு ஒரு அரசியல் நடவடிக்கை என்றவகையில் அரசியல் நடவடிக்கை (Culturalresistance Reader>8) என்ற வகையில் அது சமூகத்தில் பல்வகையில் செல்வாக்குச் செலுத்துகிறது.

பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளையின் துரோகிகள் எனும் நாடகம் வரலாற்றுநாடகமாக இல்லாதபோதும் 'historification' என்ற அணுகு முறையில் சமகாலத்து இலங்கை அரசியல் நிலமைகளிற்கு எதிர்வினை யாக இந்நாடகத்தினை எழுதியுள்ளார். பேட்றோல்ற் பிறெக்ற் சமகால நிலமைகளைக் கூறுவதற்கு வரலாற்றாக்கல் உத்தியினைப் பயன்படுத்தி, நாடகக் காட்சிகளையும், சம்பவங்களையும் வரலாற்றுக் காலம் ஒன்றில் நிகழ்வதாகக் காட்டுவார். இத்தகையதாக நாடகங்கள் உருவாக்கும் பண்பு ஒடுக்குமுறைக்குட்பட்ட பல சமூகங்களில் நிலவியதைக் காண லாம். இது எதிர்காலம் பற்றிய தரிசனம் அல்லது எதிர்வு கூறலாகவும் அமைகிறது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் துரோகிகள் எனும் நாடகம் 1965இல் எழுதப்பட்டது. இந்நாடகத்தில் இலங்கையின் இனமுரண்பாடுகள் வலுவடைந்து ஆயுதப் போராட்டமாக வடிவம் பெறுவது எதிர்வு கூறப்பட்டது.

பண்பாட்டு எதிர்ப்பு என்பது ஒரு அரசியல் நடவடிக்கை - அரசி யல் கதையாடல்களை எழுதுதல் மீளஎழுதுதல் ஒரு சமூகம் அரசியல் நடவடிக்கையில் இலகுவாக காலடி எடுத்துவைக்கும் வழியையும் வழங்குகிறது.குறிப்பாக சங்கிலி அரசன் தொடர்பான நாடகங்களில் உணர்ச்சிவசமான முடிவுகள் இடம்பெற்றன. இவ் வரலாற்று நாடகங்க ளூடாக இன முரண்பாடுகளுக்கும் ஏனைய சமூகப் பிரச்சனைகளிற்கும் உணச்சிசார் வடிவம் கொடுத்தன பெரும்பாலான நாடகங்கள். அது நடைமுறை அரசியலிலும் ஏனைய சமூக முரண்பாடுகளை அணுகு வதிலும் உணர்ச்சிவசப்பட்ட தீர்வுகளை நோக்கிச் செல்வதற்கான முன்னுதாரணங்களாக இருந்தன எனலாம். இவ்வாறான சமகாலத்

தேவைகள் இருப்பினும் இன்று சிந்திக்கும் பொழுது நாடகத்தின் சமூகப்பயன் தொடர்பான சில விமர்சனபூர்வமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றன. எனினும் இவ்வாறாக எழுதப்படும் நாடகங்கள் அவ்வக்கால சூழமைவில் வைத்துப் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை.

நாடகங்களின் உள்ளடக்கத்தில் அரசியல் செய்தி தங்கியுள்ளது. அந்த அரசியற் செய்தி பரவும் முறையாகவும் நாடகங்கள் இருந் துள்ளன. மக்களை அரசியல் மயப்படுத்துவற்கு இந் நாடகங்கள் காலனித்துவ மற்றும் காலனித்துவ காலத்திற்குப் பின்னான காலப் பகுதியிலும் பயன்பட்டமையைக் காணமுடிகிறது. அதிலுள்ள அரசியல் செய்தி வெளிப்படையாகக் கவனிக்கப்படாலிருக்குமானால் அதுதான் அரசிற்செய்தி. அதுதான் மக்களிற்கு சொல்லப்பட வேண்டிய செய்தி. மேலாண்மைக்கு எதிரான சிந்தனையின் வெளிப்பாடுதான இவ் வரலாற்று நாடகங்கள். அவை காலனித்தவ எதிர்ப்புப் பற்றிப் பேசி னாலும் அது இனரீதியான மேலாண்மைக்கு எதிரானதாகவே இருந்தது. இன முரண்பாடும் அதன் மேலாதிக்கம் தொடர்பாக வெளிப்படையாகப் பேச முடியாத நிலையில் அவை கானித்துவத்தின் மேலாண்மையைப் பற்றிப் பேசுகின்றன. ஈழத்துத் தமிழ் நாடகங்களைப் பட்டியற்படுத்திப் பார்க்கும் போது தெரியவரும் சமூகவரலாறானது நாடகம் எவ்வளவிற்கு சமூகநிலமைகளின் மீது எதிர்வினையாற்றியுள்ளது என்பதற்கான ஆதாரமாகும்.

"அரங்கு என்பது ஒரு அறிவின் வடிவம் அது சமுதாயத்தை மாற்றுவதற்கான வழிமுறையாகவும் இருத்தல் வேண்டும். எமது எதிர்காலத்தைக்கட்டி எழுப்புவதற்காக காத்திருப்பதை விடவும் அரங்கு எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதற்கு முடியும்" - ஒகஸ்ரா போவால்

**உசாத்துணை**

சண்முகசுந்தரம். த (1964), *பூதத்தம்பி,* மாவிட்டபரம்.

சிவத்தம்பி.கா (2003), பேராசிரியர். *கணபதிப்பிள்ளை நாடகத்திரட்டு,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சோமசுந்தரப்புலவர் (1955), *சிறுவர் செந்தமிழ்,* கொழும்பு.

Cultural Resistance : https://www.researchgate.net/publication/262353963_Chapter_Two_Ideology_and_Cultural_ResistanceChapter TwoIdeology and Cultural Resistance ( E-Book (15.12.2020))

David Jefferess (2008) Postcolonial Resistance: Culture, Liberation and Transformation, University of Toronto Press, Jan 1, 2008 (E-Book, 12.12.2020)

Caoimhghin Ó Croidheáin (2019),Popular Theatre as Cultural Resistance: Engaging Audiences Worldwide(E-Book 12.12.2020)

Janelle Treibitz, ed. by Kate Khatib, Margaret Killjoy, Mike McGuire, Excerpted from "We Are Many: Reflections on Movement Strategy from Occupation to Liberation"; published by AK Press (E-Book ,10.12.2020)

Culture, media, theory, practice: perspectives https://dokumen.pub/culture-media-theory-practice-perspectives-8773079103-9788773079102.html

Resistance through Rituals edited by Stuart Hall and Tony Jefferson (1976)

David Jefferess (2008) Ideology and Cultural Resistance, Postcolonial Resistance: Culture, Liberation and Transformation, University of Toronto Press, Jan 1, 2008

Awam Ampka (2004), Theatre and Postcolonial, Desires, Routldge publication, London

Kate Khatib, Margaret Killjoy, Mike McGuire, Excerpted from "We Are Many: Reflections on Movement Strategy from Occupation to Liberation";By Janelle Treibitz, ed. published by AK Press

Culture, media, theory, practice: perspectives https://dokumen.pub/culture-media-theory-practice-perspectives-8773079103-9788773079102.html

Cultural Resistance; https://www.newtactics.org/conversation/cultural-resistance-arts-protest (10.12.2020)

Helen Gilbert and Joanne Tompkins (2006), Post Colonial Drama-theory, practice, politics, routledge, London and NewYork

Pavis, Patrice (1998), Dictionary of Theatre, Terms, concepts and Analysis, Canada.

Drew Eisenhauer, Brenda Murphy (2013), Intertextuality in American Drama: Critical Essays on Eugene O'Neill, Susan, Mac Far Land & Company Limited, London